**Dr. H. V. HANDE :** Sir, this problem of level-crossing and the provision of overbridges over such level-crossings have been considered in Tamilnad for a long time in the past. The provision of overbridges has been a long-standing requirement in Tamilnad. But, the real difficulty has all along been the financial implications. Will this Government consider the possibility of collecting money, some fee, after construction of these overbridges, from the car-owners who use such overbridges ? This is being done in respect of a culvert constructed in Panruty. The car-owners are asked to pay a rupee or so for the whole day for using the culvert. I am sure this is a practical proposition and the car-owners, after all, will not grumble to pay this small amount. Will the Government re-examine this proposal and come forward to use the funds so collected for meeting the cost of putting up the approach roads ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி வசூலிப்பது பாலங்கள் கட்டுகின்ற இடத்திலே பல தொல்லைகள் ஏற்படுவதாக இருக்கும். இதைக் கூட பெரிய கார்கள் வைத்திருப்பவர்களிடத்திலேதான் வசூலிக்க வேண்டி யிருக்கும். ஏழை மக்கள் உபயோகிக்கும் வாகனங்களுக்கு வசூலித்தால் ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ரயில்வே மேம்பாலங்களைப் பொறுத்தவரையில், கனம் உறுப்பினர் சொன்ன கருத்தை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள யோசிக்கப்படும்.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, கோவை நகரத்திலே மிக முக்கியமான பாதையாகிய அவனாசி பாதையில் உள்ள ரயில்வே கேட்டும், வட கோவையில் உள்ள கேட்டும் அடிக்கடி அடைக்கப்பட்டு விடுவதால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக, தொழிற்சாலைக்குச் செல்லும் தொழிலாளர்களும், கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவர்களும், அலுவலகங்களுக்குச் செல்லும் அரசாங்க அலுவலர்களும் பாதையில் நிறுத்திவைக்கப்பட்டு, பதினைந்து இருபது நிமிடங்கள் காலதாமதம் ஆகின்றது. இதனால் அவர்கள் மிகுந்த சிரமம் அடைகின்றார்கள். தமிழக அரசு சிபாரிசு செய்துள்ள திட்டங்களில் கோவை நகரத்திற்கு முதலிடம் தந்து, இந்தத் திட்டத்தை முதலில் நிறைவேற்றித் தருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எற்கனவே இந்தப் பட்டியல் வரிசைப்படுத்தப்பட்டுவிட்ட காரணத்தினால் இப்பொழுது அந்த வரிசை முறையை மாற்ற இயலாது. திடீரென்று கோவை நகரத்திற்கு முதன்மை இடம் என்று மாற்றினால் அதனால் பல தகராறுகள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Bridges*

*131 *Q.*—Thiru A. CHIDAMBARANATHA NADAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state —

(*a*) the present condition of the small bridge at Kazhimar in Colachel–Karungal road across Pampuri–Vaikkal ;

(*b*) whether there is any proposal to widen this narrow culvert; and

(*c*) if so, when the work will be started ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) பாலம் நல்ல நிலையில் இருப்பதாகத் தெரிய வருகிறது.

(இ) பாலத்தை அகலப்படுத்துவதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

THIRU A. CHIDAMBARANATHA NADAR: Sir, is there any possibility of widening this bridge at least in the near future?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்போதுள்ள பாலத்தை 14 அடி அகலத்திலிருந்து 24 அடி அகலம் உள்ள பாலமாக விரிவுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. இதற்கு சுமார் 80 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதை உடனடியாகச் செய்ய முடியாமல் இருப்பதற்குக் காரணம் பணத்தட்டுப்பாடே தவிர வேறு ஒன்றும் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, கொளச்சல் ஒரு முக்கிய சிறிய துறைமுகம். ஆகவே, இந்தப் பாலம் அவசியமானது என்ற அளவிலே விரிவுபடுத்த, இந்தத் திட்டத்தை அடுத்த திட்டத்திலாவது எடுத்துக்கொள்ள அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பாலத்தை இப்போது விரிவுபடுத்துவதாக இல்லை. பாலத்தை விரிவுபடுத்துவதில் இந்த அரசாங்கத்திற்கு அதிக அக்கறை இருக்கிறது. நிதிநிலையை அடிப்படையாக வைத்து இது யோசிக்கப்படும்.

*132 வினா—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

மேலூர் வட்டம், சொக்கலிங்கபுரத்திற்கும் பாண்டாங்குடிக்கும் இடையில் பாலாற்றின் மீது பாலம் கட்டுவதற்குரிய ஆய்வு வேலைகள் முடிந்தும், இன்னும் பாலம் கட்டுவதற்குரிய பணி தொடங்காததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சொக்கலிங்கபுரத்திற்கும் பாண்டாங்குடிக்கும் இடையில் பாலாற்றின் மீது தற்போது ஆற்றுப் படுகை மட்டத்திலேயே போட்டுள்ள ஊடு பாலத்திற்கு பதிலாக, முறையான பாலம் ஒன்றைக் கட்டுவது குறித்த செயற்குறிப்புகளை (நெடுஞ்சாலை-கிராமப்பணிகள்) தலைமைப் பொறியாளர் அனுப்பியுள்ளார். இச்செயற்குறிப்புகள் அரசாங்கத்தால் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, there are some fortunate rivers in our State over which a number of bridges have been constructed during the past one century. At the same time there are a number of other rivers over which not a single bridge has been constructed so far. Therefore, will the Hon. Minister for Public Works be pleased to pay his attention to those rivers over which bridges have not been constructed yet?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதுபற்றி உரிய நேரத்தில் முறையாக கவனிக்கப்படும்.

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே, மதுரை-காரைக்குடிக்கும் திண்டுக்கல்-காரைக்குடிக்கும் மத்தியிலுள்ள சொக்கலிங்கபுரத்தில் ஏராளமாக முஸ்லீம்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் காங்கிரஸுக்கு விரோதமாக இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக முன்பிருந்த அரசாங்கம் வேண்டுமென்றே இந்தத் திட்டத்தைத் தள்ளிப்போட்டுக்கொண்டே வந்ததா?

திரு. கே. விநாயகம்: ஆன் எ. பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார் ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு குறிப்பிட்ட இடத்திலே இருக்கின்ற முஸ்லீம்கள் காங்கிரசுக்கு விரோதமாக இருந்தார்கள் என்பதால் முன்பிருந்த அரசாங்கம் வேண்டுமென்றே இந்தத் திட்டத்தைப் புறக்கணித்தது என்று சொல்வது முறையாகாது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படிக் கேட்பது நியாயம் இல்லையென்று சொன்னால், அங்கு வாழ்ந்துவந்த முஸ்லீம்கள் தி.மு.க. வுக்கு ஆதரவாக இருந்தார்கள் என்று கேள்வியை மாற்றிக் கொள்ளலாமா?